நாகர்கோவிலில்

# விஸ்வ பிரம்ம ஜெயந்தி விழா

## 2 அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்

நாகர்கோவில், செப்.17-
தமிழ்நாடு விஸ்வகர்ம கைவினைஞர்கள் சங்கம் சார்பில் விஸ்வப் பிரம்ம ஜெயந்தி விழா இன்று (செவ்வாய்க்கிழமை) தொடங்கி 22-ந் தேதி வரை நாகர்கோவில் மீனாட்சிபுரம் ஏ.எஸ்.டி. திரு மண மண்டபத்தில் நடக்கிறது. இதையொட்டி இன்று காலை 10 மணிக்கு விஸ்வகர்ம குருபூஜையும், தொடர்ந்து அன்னதானமும் நடக்கிறது. அன்னதானத்தை சென்னை தர்மலிங்கம் நாகம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் முருகசெல்வம் தொடங்கி வைக்கிறார். பின்னர் மெல்லிசை நிகழ்ச்சி நடக்கிறது.

20-ந் தேதி மாலை 5.30 மணிக்கு திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. 22-ந் தேதி பிற்பகலில் மாவட்ட தலைவர் நாகராஜன் முன்னிலையில் விஸ்வகர்ம ரத ஊர்வலமும், மாலை 5 மணிக்கு கைவினைஞர்கள் சங்க விழாவும் நடக்கிறது. விழாவில் அமைச்சர்கள் பச்சைமால், ராஜேந்திரபாலாஜி, நாஞ்சில் முருகேசன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்கள்.

சங்க காப்பாளர் கே.பி.சுப்பை